20.08.2019

அ.வ. எண். 23/2018

பிடபிள்யு 1 ( பாரதிதாசன்)

குவி.

தாவா ஏ பட்டியல் சொத்தின் தென் வடல்அளவு 12 1/2 அளவு ஆகும் கிழமேல் அளவு 89 அடியாகும். அதன் கதவு எண். புதிய எண். 2/53 ப, எண்.2/88 ஆகும். எனது வீடடிற்கு தெற்கில் கலியன் செட்டியாருக்கு சொந்தமான இடம் உள்ளது. கிழக்கில் வெள்ளாளர் தெரு உள்ளது, மேற்கில் சிறு மருதுார் உள்ளது. பி அட்டவணை சொத்தின் தென் வடல் அளவு 21 1/2 அடியாகும். கிழமேல் 92 1/2 அடியாகும். ஏ பட்டியல் சொத்தானது நத்தம் சொத்தாகும். அதன் புல எண். 2/41ஆகும். எனது சொத்திற்கு வடக்கால உள்ள சொத்து முன்னால் உரிமையாளர் அப்பாவு பிள்ளையாகும். தற்போது முருகானந்தம் என்பவருக்கு சொந்தமாகும். முருகானந்த சொத்திற்கு மேற்பகுதியில் வடபுறத்தில் செல்லமாலும், தெற்கில் ராஜம்மாள் மற்றும் சந்திரசேகர் சொத்து உள்ளது. நான் 2006ல் சொத்தை கிரயம் வாங்கினேன். நான் குமரேசன் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன். குமரேசன் 1991ல் அந்த சொத்தை கிரயம் பெற்றார். குமரேசன் வெங்கட்ராம செட்டியாரிடமிருந்து கிரயம் பெற்றார். எனது சொத்திற்கும், மேற்கில் உள்ள இடத்தில் சிறுமருதுார் செல்லும் சாலையை ஒட்டி டைலர் கடை வைத்துள்ளேன். எனது வீட்டிற்கு பிரதான வாசலானது கிழக்கு பக்கத்தில் அமைந்துள்ளது. அந்த பிரதான வாசற்குரிய கதவு எண் தான். ப.எண். 2/88, பு. எண் 2/53 என்றால் சரிதான். எனது வீட்டிற்கு மாடியில் அரை உள்ளது. அது 1896ம் வருடம் கட்டப்பட்டதாகும். 1896லிருந்து அந்த கட்டிடத்தில் எந்த மாற்றமும் செய்யவில்லை என்றால் சரிதான். வெங்கட்ராம செட்டியாருக்கு சொந்தமான சொத்துதான் என்னிடம் உள்ளது என்று சொன்னால் சரிதான். வாசாஆ 3ல் வாளாடி கிராமம், வெள்ளார் தெரு, தென்வடலான வீதி, மேல் சரகில் வீதிக்கு மேற்கு வெங்கடாசல செட்டியார் மனைக்கு வடக்கு, சிறு மருதுார் வழிபாதைக்கும் கிழக்கு, முத்து கருப்பு பிள்ளை மனைக்கு தெற்கு இதற்குட் பட்ட மனையில், என் சொந்தம் கீழ் பாதி கூரை வீடு என கண்டுள்ளது என்றால் அந்த பத்திரத்தில் அவ்வாறு தான் உள்ளது. இந்த பத்திரத்தில் தென் வடல் அளவு 25, கிழமேல் 75 அடி என கண்டுள்ளது என்றால் சரிதான்.

மொத்த சொத்தின் கீழ் பாதியை மட்டும் கிரயம் பெற்றதாக வாசாஆ 3, ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ3ல் வடபுறத்தில் சந்து உள்ளதாக எதுவும் காணபடவில்லை என்றால் சரிதான். வாசாஆ.2. குமரேசன் என்பவர் கிரயம் பெற்ற பத்திரம் என்றால் சரிதான். வாசாஆ2ல் கண்டுள்ள வழக்கு ஏ மற்றும் பி அட்டவணை சொத்து இரண்டையும் குறிக்கும். வாசாஆ2ல் தெற்கு புற சுவரில் பொதுவில் பாதியும், வடபுறம் முழு சுவர் பாத்தியமும் கண்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ2ல் வீட்டிற்க்கு வடபுறம் 2 அடி நடைபாதை பாத்தியம் என கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட வாசகத்தை 2 அடி நடைபாதை குறித்து வாசாஆ3 பத்திரத்தில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். எனது வீட்டின் மேல் தளத்தில் கழிவறை வசதி செய்யவில்லை. என் முதல் மாடியில் மேற்கு கடைசியில் ஒரு அரை உள்ளது. தரைதளத்தில் கழிவறை வசதி உள்ளதா என்றால் இல்லை. முதல் தளத்தில் உள்ள அரையின் அளவு 10 அடி 12 அடி ஆகும். முதல் தளத்தின் மேற்கூரையானது மெட்ராஸ் உட் ஆகும். முதல் தளமானது 1896லிருந்தே உள்ளது. வாசாஆ2 பத்திரத்தில் எனது முதல் தளத்தில் அரை உள்ளதாகவோ கட்டுமானம் உள்ளதாகவோ குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். வாசாஆ2 பத்திரத்தில் கட்டிடத்தின் வயது 100 வருடம் என குறிப்பிட பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வாசாஆ1 பத்திரத்தில் மொத்த சொத்தின் கிழமேல் தென்வடல் அளவுகள் கட்டிடத்தின் வயது முதல் மாடியில் அரை இருப்பதை குறிப்பிடபடாமலும், வடபுறத்தில் இரண்டு அடி நடைபாதையும் தவறாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ2ல் வடபுறம் உள்ள நடைபாதையானது பொதுவில் பாத்தியம் பட்டது என்றோ, அல்லது எனக்கு விற்றவருக்கு சொந்தம் என்றோ குறிப்பிட படவில்லை என்றால் சரிதான். வாசாஆ1 நான் கிரயம் பெற்ற பத்திரமாகும். வாசாஆ2 பத்திரத்தில் அடிதளம் 797 1/4 சதுர அடி என குறிப்பிட பட்டள்ளது என்றால் சரிதான். வாசாஆ1ல் வாசாஆ2 ல் குறிப்பிட்டுள்ள அடிதளம் 797 1/4 சதுர அடிமட்டும் தான் காட்டப்பட்டுள்ளது என்றும், மேல் தளத்தில் உள்ள அரையானது காண்பிக்கப்படவில்லை என்பது சரிதான். வாசாஆ1லிலும், வடபுற சுவர் முழு சுவர் பாத்தியமும் கட்டபட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் வடபுற சுவருக்ககும் வெளியில் 2 அடி அகல நடைபாதை பாத்தியமும் மாமூல் உண்டு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாதையானது எனக்கு பாத்தியம் பட்டது என்றோ பொதுவில்

பாத்தியம் பட்டது என்றோ குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். நான் 2006ல் சொத்தை கிரயம் வாங்குவறத்கு மூன்பே பிரதிவாதியின் முன் கிரய தாரர் எனது சொத்தின் வடபுறத்தில் உள்ளார் என்றால் சரிதான். வாசாஆ1 பத்திரத்தில் கட்டிடத்தின் வயது 80 வருடம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1991ல் குமரேசன் கிரயம் பெற்ற காலத்திலிருந்து நான் தாவா சொத்தில் இருந்து வருகிறேன். வடபுற சொத்தின் முந்தைய உரிமையாளர்கள் சௌந்தர்ராஜன், இளங்கோவன், தியாகராஜன் மற்றும் ஜோதி லெட்சுமி, பாக்கியலெட்சுமி ஆகியோர் ஆவார்கள். தியாகராஜன் இறந்துவிட்டார். தியாகராஜனின் மனைவி பெயர் ராணி, மகன் பாஸ்கர் ஆவார். வாசாஆ4ல் புல எண் 201/5ல் 89 சதுர மீட்டர், பட்ட எண் 514, எனக்கும் எனது சகோதரருக்கும் கொடுக்கப்பட்டது ஆகும். எனக்கு கிரயம் செய்த குமரேசன் பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாசாஆ5,6,7 ஆகியவை நான் குடியிருக்கும் வீட்டிற்கு ஏற்பட்ட ரசீதுகள் ஆகும். எனது வீட்டின் கீழ் தளத்தில் வடபுற சுவற்றில் ஜன்னல் ஏதேனும் உள்ளதா என்றால் தற்போது இல்லை. 2018ல் தான் பிரதிவாதி எனது சொத்திற்கு வடபுறம் சுவற்றிற்கு வடக்காலில் உள்ள சொத்தை கிரயம் பெற்றார். நான் 1991ல் குடிவருவதற்கு முன்பே பிரதிவாதியின் சொத்தின் அமைப்பு எப்படி இருந்ததோ, அப்படியே தான் இருந்துது. பிரதிவாதியின் வீட்டின் கீழ் புறத்தின் மங்களூர் ஓடு போட்ட திண்ணை உள்ளது என்றால் சரிதான். அந்த திண்ணையில் தெற்கு பகுதியில் வாசற் படி உள்ளதா என்றால் உள்ளது. சந்திரசேகர் கிரயம் பெற்ற சொத்திற்கு பக்கத்தில் ஒரு வாசற் படி உள்ளதா என்றால் உள்ளது. சந்திரசேகர் இடத்திற்கு போவதற்கு எந்த இடத்திலிருந்து போக வழி உள்ளது என்றால் தெருவில் இருந்தும் போகலாம், எனது சந்தின் வழியாகவும் போகலாம். செல்லமாளுக்கு பாதையானது என்னுடைய சந்தின் வழியாகவும் உள்ளது. தெற்கால பக்கத்தில் உள்ள பாதை வழியாகவும் செல்லலாம். எனது சொத்திற்கு தெற்கே உள்ள கலியன் செட்டியாருக்கு கிழமேல் 89 தென் வடல் 12 1/2 அடி சொந்தமாகும். கலியன் செட்டியருக்கு கிழமேல் 89 அடி தென் வடல்12 1/2 அடி சொந்தம் என்று எதனை வைத்து சொல்கிறேன் என்றால் யுடிஆரில் அளந்ததை வைத்து சொல்கிறேன். எனக்கு தென் வடல் 12 1/2 கிழமேல் 89அடி என்பது எதனை வைத்து சொல்கிறேன் என்றால் எனது பத்திரத்தை வைத்து சொல்கிறேன். எனக்கு கிரயம் செய்து கொடுத்த குமரேசனுக்கும், வாசாஆ 4 பட்டாவில் கண்ட

89 சதுர மீட்டர் தான் சொந்தமானதாகும். எனக்கு வாசாஆ4 பட்டாவில் கண்ட அளவு தவறானதாகும். வாசாஆ4. பட்டாவை வழக்கு தாக்கல் செய்த ஒரு வாரத்திற்கு முன்பு சான்றிட்ட நகல் பெற்றேன். வாசாஆ1ல் கண்ட படி வீட்டு வரி, மின் இணைப்பு ஆகியவற்றையும் அடிமனைக்கு உண்டான பட்டாவையும் மாற்றிவிட்டேன். அந்த பட்டா காணாமல் போய்விட்டது அதனை 2006ல் நான் வாங்கிய பிறகு பட்டாவை மாற்றிவிட்டேன். பத்திரத்தில் கண்ட அளவும் பட்டாவில் கண்ட அளவும் தவறாக உள்ளது என்று எப்போது தெரிய வந்தது என்றால் 3 வருடம் முன்பு தெரிய வந்தது. அதனை சர்வேயரை வைத்து அளந்து பார்த்ததில் தான் சொல்கிறேன். நான் அளந்து பார்த்த போது நான் தற்போது தாக்கல் செய்துள்ள பத்திரம் அனைத்தும் என் கைவசம் இருந்தது. அது குறித்து ஏதேனும் மாற்றி அமைக்க மனு கொடுத்தேனா என்றால் மாட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்துள்ளேன். அவ்வாறு மனு கொடுத்ததற்கான ஆவணம் என்னிடம் உள்ளது தேவையானல் தாக்கல் செய்யலாம். நான் பத்திர பதிவு செய்த அன்று கூட ஆட்சேபனை மனு பத்திர பதிவு அலுவலகத்தில் கொடுத்தேன் என சாட்சி தானா சொல்கிறார்.